மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(12.12.2011)** தலைமைச் செயலகத்தில் சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட அரசு பங்களிப்பாக ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1995-ம் தமிழக முதலமைச்சராக இருந்த போது விளையாட்டு வீரர்களின் நலன் கருதியும், சென்னையில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும், பல்வேறு விளையாட்டுகளில் அவர்கள் சென்னையில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிக் கொணர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் நவீன முறையிலான விளையாட்டு அரங்குகளை அமைத்துக் கொடுத்தார்கள். இதன் அடிப்படையில் சென்னையில் கட்டப்பட்ட உலகத் தரம் வாய்ந்த டென்னிஸ் விளையாட்டு அரங்கில் 1997 முதல் உலக அளவில் புகழ் பெற்ற வீரர்கள் பங்கு பெறும் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றது.

2005–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, முதன் முதலாக சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்திட 1 கோடி ரூபாய் தமிழக அரசின் பங்களிப்பாக நிதியுதவி வழங்கி முன்னோடியாக விளங்கினார்கள்.

கடந்த காலங்களைப் போன்றே இப்போட்டிகள் 2012-ம் ஆண்டு ஜனவரி மாதம், தனியார் பங்களிப்புடன் சென்னையில் நடைபெறவுள்ளது. இந்த சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசின் நிதி உதவியாக ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்க கௌரவ செயலாளர் திரு. C.B.N.ரெட்டி அவர்களிடம் வழங்கி, போட்டிகளை சிறந்த முறையில் நடத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டுமென்ற தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு & இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைகள் துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைச் செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்– செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.